**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , MUDUKULATHUR**

Case No.STC.10/2021

Prosecution witness.01

| | |
|---|---|
| பெயர் : மோகன்தாஸ் | ஜாதி : |
| தந்தை பெயர் : | தொழில் : |
| கிராமம் : | சமயம் : |
| தாலுகா : | வயது : |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 12th day of June 2023.

12.06.2023

**முதல் விசாரணை :**

நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். நான் கமிஷன்மண்டி மற்றும் விவசாயம் செய்கிறேன். எனது பக்க சாட்சித்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். நிரூபண வாக்குமூலத்திலுள்ள கையொப்பம் என்னுடையது தான். அதை படித்து பார்த்து கையொப்பம் செய்துள்ளேன். எனது பக்க ஆவணங்கள்

1) 26.08.2020 ம் தேதியிட்ட காசோலை எண்.176272 ரூபாய் 2,57,000/-த்திற்கான வங்கி காசோலை பு.த.சா.ஆ.1

2) 18.09.2020 ம் தேதியில் காசோலை எண்.176272 போதிய பணம் இல்லை என்று வங்கியால் கொடுக்கப்பட்ட குறிப்பாணை பு.த.சா.ஆ.2.

3) 17.10.2020 ம் தேதியில் காசோலை எண்.176272 போதிய பணம் இல்லை என்று வங்கியால் கொடுக்கப்பட்ட குறிப்பாணை பு.த.சா.ஆ.3.

4) 12.11.2020 ம் தேதி எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பின் அலுவலக நகல் பு.த.சா.ஆ.4.

5) எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பிற்கான அஞ்சல் கணினி நகல் பு.த.சா.ஆ.5.

6) 30.11.2020 ம் தேதி வழக்கறிஞருக்கு எதிரி அனுப்பிய பதில் அறிவிப்பு பு.த.சா.ஆ.6.

புகாரில் குறிப்பிடப்பட்டுள்ளப்படி தீர்ப்பாக வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

1) எதிரி எனக்கு 20 வருடங்களாக பழக்கம் ஆகும். நிரூபண வாக்குமூலத்திலுள்ள கையொப்பத்தை நான் எங்கு வைத்து செய்தேன் என்றால் வழக்கறிஞர் அலுவலகத்தில் வைத்து செய்தேன். நிரூபண வாக்குமூலத்திலுள்ள சங்கதிகளை வழக்கறிஞர் தான் எழுதினார் என்றால் இல்லை நான் தான் கூறினேன். எதிரியிடம் நான் பலமுறை பணம் கொடுக்கல் வாங்கல் செய்துள்ளேன். எதிரியும் கமிஷன்மண்டி வைத்து நடத்திவருகிறார். நகை அடகு வைத்து கொடுத்தற்கான ரசீதை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. காவல்நிலையத்தில் புகார் கொடுத்து அப்போது எதிரி பணம் தருவதாக ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்த ஆவணத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

2) எதிரி என்னிடம் வாங்கும் பணத்தை முறையாக செலுத்திவிடுவார் என்று சொன்னால் சரிதான். எதிரிக்கு நான் காசோலை பணத்தை கொடுப்பதற்கு முன்பாக கொடுத்த பணத்திற்கு காசோலை ஏதும் எழுதி வாங்கிக்கொண்டேனா என்றால் இல்லை. எதிரிக்கு எங்கு எங்கு எல்லாம் வங்கி கணக்கு உள்ளது என்று தெரியுமா என்றால் தெரியாது. நான் வட்டிக்குவிடும் தொழில் செய்கிறேனா என்றால் இல்லை. நான் கந்துவட்டிக்கு பணம் கொடுப்பதாக என் மீது இராமநாதபுரம் சார்ஆட்சியரிடம் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். நான் அடிக்கடி எதிரியின் கமிஷன்மண்டிக்கு சென்றுவருவேன் என்றால் சரிதான்.

3) நான் அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு எதிரியும் பதில் அறிவிப்பு அனுப்பியுள்ளார் என்றால் சரிதான். நான் எதிரிக்கு பணத்தை எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். பணத்தை கொடுக்கும்போது யார் உடன்இருந்தார் என்றால் ராமமூர்த்தி என்பவர் உடன்இருந்தார். ராமமூர்த்தி இராமநாதபுரத்தை சேர்ந்தவர்.

(எதிரியின் கற்றறிந்த வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது).